செலவுக்குத் தருகிறோம், கார் வேண்டாம் என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். கார் சொந்தமாக வைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு வசதி இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.க்களுக்கு டீசல் செலவைச் செய்யமுடியாதா என்ற கேள்வி இருக்கிறது; ஒன்று. இரண்டாவது, கரும்பு விவசாயிகளுக்கு *1,220* ரூபாய் நீங்கள் கொடுக்கிறீர்கள். *2,000* ரூபாய் வழங்க வேண்டுமென்று கரும்பு விவசாயிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அதை உயர்த்தமுடியவில்லை.

பிற்பகல் 1-55

அதேபோன்று, *400* ரூபாய் பென்ஷன் பெறுவதற்கு, அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கவேண்டுமென்ற நிபந்தனை மட்டும் போடப்படுகிறது. *400* ரூபாய் பென்ஷனைக் கொடுப்பதற்குண்டான அந்த நிபந்தனையை இரத்துச் செய்யமுடியவில்லை. ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய இந்த பதில் எங்களுக்குத் திருப்தியில்லை என்று தெரிவித்து, வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் முடிவுற்றது.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நலம் பெற்று விரைவில் அவைக்கு வர பேரவைத் தலைவர் விழைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நலம் பெற்று, விரைவில் இந்த அவைக்கு வந்து, அவையை அலங்கரிக்க வேண்டுமெனப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

6. மாண்புமிகு முதலமைச்சருக்கும், மாண்புமிகு நிதி அமைச்சருக்கும் பேரவைத் தலைவர் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் பேரவையின் சார்பில் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)